**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 190/2015**
**நாள் 22/12/2023, வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - சசிகுமார் | த/பெயர் - நாகராஜன் |
| வயது - 48 | தொழில் - |
| விலாசம் - தத்தமஞ்சி கிராமம் | |

**குறுக்கு விசாரணை -**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கின் பிரதிவாதி கல்யாண சுந்தரத்தை எனக்கு தெரியும் எந்த வகையில் தெரியும் என்றால் எனது உறவினர் ஆவார். இந்த வழக்கில் 1994ல் உயில் எழுதும் போது எனக்கு வயது 15 இருக்கும். உயில் ஆவணத்தில் எனது தந்தை கையொப்பம் இட்டார் என்று செவி வழி வந்த செய்தியின் மூலம் கேள்வியுற்றேன். அவர் நேரடியாக கையொப்பம் இட்டதை நான் பார்க்கவில்லை. எனது தந்தை எப்போது காலமானார் என்றால் 2008ல் காலமானார். எனது நிரூபண வாக்குமூலத்தில் இந்த உயில் சம்மந்தமாக வேறு ஒரு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த நீதிமன்றம், என்ன வழக்கு எண் என்று எனக்கு தெரியாது. எனது தந்தை கூறி தெரியும். எனது உடன் பிறந்தர் ஒரே ஒரு தங்கை. அம்மா தற்போது உயிருடன் உள்ளார். எனது தாயார் ஏன் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் அவருக்கு உடல் நல குறைபாடு உள்ளது அதனால் வரவில்லை. மூத்தவர்கள் உயிருடன் உள்ள காரணத்தில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை 1994ல்

உயில் ஆவணத்தில் கையொப்பம் இட்டார் என்றால் சரிதான்.



அதே போல் 1994ல் எனது தந்தை வேறு ஏதேனும் ஆவணத்தில் கையொப்பம் இட்டிருந்தால் அதை ஒப்பிட்டு பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். அது போல் ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை. கண்ணால் பார்த்து கேட்டு யார் வேண்டுமேனாலும் சாட்சியம் அளிக்கலாம் என்றால் சரிதான். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை உயில் ஆவணத்தில் கையொப்பம் இடும் போது எனக்கு 15 வயது என்றும் அதனால் எனக்கு இந்த வழக்கு பற்றியும் ஆவணத்தை பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னை வள்ளுவன் சாட்சியம் அளிக்க அழைத்ததால் அவர் சொன்னதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி கோட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.. நான் உண்மைக்கு புறம்பாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் எனது நிரூபண வாக்குமூலத்தை ஏற்க்க கூடாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**